# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:96 தேதி:-04.02.2016

## BSNL மீண்டும் சாதனை- ஜனவரியில் 20 லட்சம் மொபைல் தொலைபேசி இணைப்புகள் மற்றும் சில மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

ஜனவரி மாதத்தில் BSNL நிறுவனம் 20 லட்சம் தொலைபேசி இணைப்புகளை கொடுத்துள்ளது. இது ஒரு புதிய சாதனை. டிசம்பர், 2015ல் 17.5 லட்சம் இணைப்புகளை கொடுத்த BSNL இந்த மாதம் இந்த வியத்தகு சாதனயினை நிகழ்த்தியதற்காக அனைத்து ஊழியர்களையும் அதிகாரிகளையும் BSNL ஊழியர் சங்கம் மனமார வாழ்த்துகிறது. அதிகப்படியான இணைப்புகளை கொடுத்த மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் 1,80,839 புதிய மொபைல் இணைப்புகளை வழங்கி மூன்றாம் இடம் பெற்றுள்ளது. இதனை முதலிடத்திற்கு கொண்டு வர உறுதியேற்போம்.

**அகில இந்திய சங்கப்பணிகளுக்காக தோழர் S.செல்லப்பா**:- நமது மாநில தலைவரும், அகில இந்திய சங்கத்தின் உதவி பொது செயலாளருமான தோழர் S.செல்லப்பா அகில இந்திய மையத்தில் இருந்து பணியாற்றுவதற்காக பிப்ரவரி 1ஆம் தேதி டெல்லி சென்றுள்ளார்.

**தோழர் சேஷகிரி ராவ் மறைவு**:- JETA சங்கத்தின் முன்னாள் பொது செயலாளர் தோழர் சேஷகிரி ராவ் அவர்கள் பெங்களூருவில் 01.02.2016 அன்று மாரடைப்பால் காலமானார். தொலைதொடர்பு துறையாக இருந்த நம் நிறுவனம் கார்ப்பரேஷனாக மாற்றப்படுவதற்கு எதிரான போராட்டத்தில் அவர் உறுதியுடன் இருந்தார். தொழிலாளர்களின் நலனுக்கான பல போராட்டங்களை தலைமை தாங்கி நடத்திய நேர்மையான தலைவர் என்ற முறையில் என்றும் அவர் நம் நினைவில் இருப்பார். அவரது மறைவிற்கு நம் அஞ்சலியை செலுத்துவதுடன், அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கும் SNEA தோழர்களுக்கும் நமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**CMD BSNL உடன் CORE COMMITTEE சந்திப்பு**:- FORUMத்தின் CORE COMMITTEE மற்றும் CMD BSNL ஆகியோருக்கு இடையே 01.02.2016 ஒரு சந்திப்பு நடைபெற்றது. பெங்களூருவில் நிறுவனம் லாபத்தில் இயங்கவில்லை எனில் BSNL ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் நடைபெறாது என CMD BSNL கூறிய கருத்துக்களுக்கு தங்களது வருத்தத்தை பேச்சு வார்த்தையின் துவக்கத்திலேயே தலைவர்கள் தெரிவித்தனர். அதற்கு பின்னர் பேசிய CMD BSNL தனியார் நிறுவனங்களுடன் INTRA CIRCLE ROAMINGகிற்கு (வலைத்தளங்களை பகிர்ந்துக் கொள்வது) BSNL நிறுவனம் எடுத்து வரும் முயற்சிகளை விளக்கினார். இந்த சூழ்நிலையில் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்துடன் INTRA CIRCLE ROAMINGகிற்கு உடன்பாடு போடுவதை தவிர வேறு வழியில்லை என்றும் தெரிவித்தார். ரிலையன்ஸ் ஜியோவுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தும் போது அதன் கடந்த கால செயல்பாடுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

**தொலைதொடர்பு இலாகாவின் புதிய செயலாளராக திரு J.S.தீபக்:-** தொலை தொடர்பு இலாகாவின் இணை செயலாளராக இருந்த திரு J.S.தீபக் செயலாளராக பொறுப்பேற்றுள்ளார். முன்னர் செயலாளராக இருந்த ராகேஷ் கர்க் CALL DROP போன்ற பிரச்சனைகளில் திருப்திகரமாக செயல்படவில்லை என்ற காரணத்திற்காக மாற்றப்பட்டுள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன. J.S.தீபக் அவர்களை தன்னுடைய தேர்வு என தொலைதொடர்பு அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்.

**மார்ச் 10 -எதிர்ப்பு தினம்:-** செப்டம்பர்-2, 2015 வேலை நிறுத்தத்தின் தொடர்ச்சியாக 2016 மார்ச்-10ஆம் தேதி எதிர்ப்பு தினம் கடைபிடிக்கும் படி மத்திய தொழிற்சங்கங்கள் அறைகூவல் விட்டுள்ளன. பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்காதே, ஒப்பந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியமாக ரூ.15,000 என அறிவிக்க வேண்டும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக இந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என அறைகூவல் விட்டுள்ளன. நாமும் அந்த இயக்கத்தில் முழுமையாக பங்கேற்போம்.

**இந்திய கூட்டமைப்பில் இருந்து விலக வேண்டுமா? குஜராத் அரசாங்கத்திற்கு உச்ச நீதிமன்றம் கேள்வி:-** இந்திய கூட்டமைப்பில் இருந்து விலக வேண்டுமா என குஜராத் அரசாங்கத்திற்கு 01.02.2016 அன்று உச்சநீதி மன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. இந்திய பாராளுமன்றத்தில் 2013ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தை இன்றைய தேதி வரை குஜராத் அரசாங்கம் அமுலாக்காததற்காகவே, உச்ச நீதிமன்றம், இந்த கேள்வியை எழுப்பியுள்ளது. நம் நாட்டின் ஏழை மக்களுக்கு உணவு தானியங்களை வழங்குவதற்காக நிறைவேற்றப்பட்ட இந்த சட்டத்தை அமுல்படுத்தாமல் நான்கு முறை தவணை வாங்கியுள்ளது. இந்த சட்டம் அமுலாக்கப்பட்டதென்றால் குஜராத்தில் உள்ள 3.8 கோடி ஏழை மக்கள் பயன் பெறுவார்கள். ஏப்ரல் 2015 வரை குஜராத் மாநில முதலமைச்சராக நரேந்திர மோடி தான் இருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. அம்பானி மற்றும் அதானிக்களுக்கு நரேந்திர மோடி காட்டிய உறுதியினை குஜராத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு காட்டவில்லை என்பதுதான் மிகப்பெரிய சோகம்.

**JTO LICE மற்றும் TTA LDCE தேர்வு முடிவுகள் மறு பரிசீலனை:-** 01.02.2016 அன்று DIRECTOR (HR) திருமதி சுஜாதாரே அவர்களை சந்தித்த நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 2013ல் நடைபெற்ற JTO LICE தேர்வுகளில் தவறான கேள்விகளுக்கு முழுமையான கூடுதல் மதிப்பெண்கள் வழங்கப்படாத மாநிலங்களில் தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொண்டார். அதே போல மகாராஷ்ட்ரா மாநில TTA LDCE தேர்வு முடிவுகளையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார். தேவையானவற்றை செய்வதாக DIRECTOR(HR) உறுதி அளித்தார். பொது செயலாளர் GM(RECT) திரு D.சக்கரவர்த்தி அவர்களையும் சந்தித்து இந்த பிரச்சனைகளை தாமதமின்றி மறு பரிசீலனை செய்யக் கேட்டுக் கொண்டார்.

**AIBDPA அகில இந்திய மாநாடு:-** AIBDPA சங்கத்தின் 2ஆவது அகில இந்திய மாநாடு 2016 பிப்ரவரி 2 மற்றும் 3ஆம் தேதிகளில் அதன் தலைவர் தோழர் அனந்த பட்டாச்சார்ஜி தலைமையில் ஆந்திர மாநிலம் திருப்பதியில் நடைபெற்றது. நமது பொது செயலாளர்

தோழர் P.அபிமன்யு, புரவலர் தோழர் VAN நம்பூதிரி உள்ளிட்ட பல தலைவர்கள் கலந்துக் கொண்டு உறையாற்றினர். அந்த மாநாட்டில் தோழர் அனந்த பட்டாச்சார்ஜி தலைவராகவும், தோழர் K.G.ஜெயராஜ் பொது செயலாளராகவும் தோழர் R.அரவிந்தன் நாயர் பொருளாளராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நமது தமிழ் மாநிலத்தில் இருந்து தோழர் S.மோகன் தாஸ் அகில இந்திய துணைத்தலைவராகவும், தோழர் காளி பிரசாத் அகில இந்திய அமைப்பு செயலாளராகவும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தோழர்களின் பணி சிறக்க தமிழ் மாநில சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**PMSஐ PLI உடன் இணைக்காதே:-** புதிய PLI கமிட்டியை நிர்ணயம் செய்து வெளியிட்ட கடிதத்தில் PMSஐ PLIஉடன் இணைத்து வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக ஏற்கனவே அப்போதிருந்த DIRECTOR(HR) திரு A.N. ராய் அவர்களுடன் விவாதித்து நிறுவனத்தின் தேசிய அளவிலான உற்பத்தி திறனின் அடிப்படையில் PLIவழங்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்ட விஷயம். ஆனால் கார்ப்பரேட் அலுவலகத்தில் இருந்து இது போன்ற கடிதம் வெளியிடப்படுவது ஒரு மோசமான விஷயம். BSNL ஊழியர் சங்கம் தனது கடுமையான எதிர்ப்பினை DIRECTOR(HR) அவர்களிடம் தெரிவித்துள்ளது.

**JTO(T) LICE தேர்விற்கான மாதிரி அறிவிப்பு**:- JTO(T) LICE தேர்வினை நடத்துவதற்கான தகவலை அனைத்து CGMகளுக்கும் கார்ப்பரேட் அலுவலகம் ஏற்கனவே அனுப்பியுள்ளது. தற்போது அந்த தேர்விற்கான மாதிரி அறிவிப்பு ஒன்றையும் கார்ப்பரேட் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

**இணைய சமதளம் தொடர்பாக அரசின் முடிவு:-** மத்திய தொலை தொடர்பு அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் தலைமையில், பிரதமர் அலுவலக இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஹர்ஷ வர்தன் ஆகியோர் அடங்கிய உயர் மட்டக் குழு இணைய சமதளம் தொடர்பாக இறுதி முடிவெடுக்க உள்ளது. DATA கட்டணங்கள் தொடர்பான பரிந்துரையை TRAI வழங்கிய உடன் இந்தக் குழு கூடும். எந்த சமயத்திலும் அந்த பரிந்துரைகள் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**